# ஜெயகாந்தன் சிறுகதைகளில் மனிதநேயம்: ஓர் ஆய்வு

M.S.F Rusdha[1], M.N.F Nasha[2], M.F.F Amna[3]

[1,2,3] *Department of Languages, South Eastern University of Srilanka*

rusdhasamees@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழில் புனைகதைகள் குறித்த சிந்தனையும் தேடலும் இடம்பெற்ற வண்ணமே உள்ளன. ஆங்கிலேயர் ஆட்சி காரணமாக இந்தியாவில் ஏற்பட்ட பொருளாதார, அரசியல் மாற்றங்கள் சமூக அமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்தின. இம்மாற்றங்கள் இலக்கிய வளர்ச்சிக்கு பெரிதும் வித்திட்டன. மேலைநாட்டைப் போலவே தமிழ் நாட்டிலும் முதலில் தோற்றம் பெற்றது நாவலாகும். அதன் பின்னரே சிறுகதைகள் தோற்றம் பெற்றன. மேலைநாட்டு இலக்கியத் தாக்கத்தினால் தமிழில் அறிமுகமான சிறுகதையானது வடிவம், அளவு, கருத்துச்செறிவு முதலான காரணங்களால் பெரும் செல்வாக்கைப் பெற்ற கலைவடிவமாகத் திகழ்ந்தது. நீண்ட கதையோட்டம் இல்லாமல் ஒரு சிறு நிகழ்வை, மன உணர்வை, மனிதப்பண்பை மையமாகக் கொண்டு படைக்கப்படும் சிறுகதைகள் மனித மனங்களை வெகுவாகக் கவர்ந்தன. சிறுகதைக்கு மக்களிடம் ஏற்பட்ட செல்வாக்கு, எழுத்தாளர் பலரும் சிறுகதை படைப்பதற்கு உந்துதலாக அமைந்தது. தமிழில் வ.வே.சு ஐயர் தொடங்கி வைத்த சிறுகதைப் பணியானது பலராலும் தொடரப்பட்டது. எழுத்தின் ஆற்றல் மற்றும் கூர்மையை அணியாகக் கொண்டு படைக்கப்பட்ட சிறுகதைகள் மக்களின் வாழ்க்கையை, வாழ்வியல் சூழல் மாற்றத்தை, மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் ஊடகமாகச் செயற்பட்டன. சிந்தனையாளர்கள், இலக்கியவாதிகள் தம் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்லும் கருவிகளாக சிறுகதையைப் பயன்படுத்தினர். இதன் காரணமாக சிறுகதைத் துறைக்குள் பல எழுத்தாளர்கள் நுழைந்தனர். அவர்களுள் ஜெயகாந்தன் முக்கியமானவர். ஜெயகாந்தன் 1950களில் சிறுகதை எழுதத் தொடங்கி, அறுபதாண்டு காலமாக தனது எழுத்தின் வலிமையால் பல பரிசுகளை வென்றவர். ஜெயகாந்தனின் சிறுகதைகள் சமுதாய மாற்றத்தை நோக்கிய கலைப்படைப்புக்கள் என்ற வகையில் சமூகத்தின் தாழ்ந்த பக்கங்களை, சமுதாய முரண்பாடுகளை,சமுதாயப் புறக்கணிப்புகளுக்கு உள்ளானவர்களை வெளிக்கொணரும் படைப்பிலக்கியங்களாக அமைகின்றன. அந்தவகையில், ஜெயகாந்தனின் சிறுகதைகளில் சுயநலம் நிறைந்து, பொதுநலம் குறைந்து காணப்படும் இக்கால சமுதாயம் கரும்புள்ளியாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மனிதநேயம் குறைந்து வருவதையும் தனிமனிதன் தாழ்ந்து போவதையும் இவரது சிறுகதைகள் சுட்டிக்காட்டுகின்றன. மனிதநேயத்தின் மாண்பினை உயர்த்துவதில், ஒவ்வொரு தனிமனிதனுக்கும் சமூகப் பொறுப்புணர்வு வேண்டும் என்பதை வலியுறுத்துவதில் ஜெயகாந்தனின் வகிபங்கு யாது? என்பதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜெயகாந்தனின் சிறுகதைகள் வலியுறுத்தும் தனிமனித ஒழுக்கம் மற்றும் மனிதாபிமான அம்சங்கள் யாவை? மேலும், இதனை வெளிப்படுத்துவதற்கு ஜெயகாந்தன் கையாண்டுள்ள உத்திகள் மற்றும் அவரது படைப்பாக்கத்திறன் போன்றவற்றை வெளிக்கொணரும் நோக்குடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வில் சமூகவியல், மானிடவியல், மொழியியல் அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாய்விற்கான தகவல் சேகரிப்பு முறையாக இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில், படைப்பாளியின் சிறுகதைத் தொகுப்புகள், படைப்பாளி தொடர்பாக பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள், இணையப்பக்கங்கள் மற்றும் ஏனைய எழுத்தாளர்களின் விமர்சன கட்டுரைகள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. இதுவரை ஜெயகாந்தன் குறித்த ஆய்வுகளில் குறிப்பிட்ட சில கதைக்கருக்களே பேசப்பட்டு வந்துள்ள நிலையில் அவரது சிறுகதைகளில் மனிதாபிமான அம்சங்களின் வகிபாகம் குறித்த எவ்வித தனியான ஆய்வுகளும் வெளிவரவில்லை என்பதை அடிப்படையாகக் கொண்டு சிறுகதைத்துறையில் பாரிய பங்காற்றிய ஜெயகாந்தனின் மனிதாபிமான சிந்தனை குறித்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டமை சிறப்பம்சமாகும். சமுதாயத்தில் மக்களின் வாழ்க்கை சிறக்க வேண்டுமெனில் மனிதநேயம் ஓர் அடிப்படை விடயம் என்றவகையில் மனிதநேயத்திற்கு தனது சிறுகதைகளில் ஓர் முக்கிய இடம் கொடுத்துள்ளார் ஜெயகாந்தன்.

**திறவுச் சொற்கள்:** *ஜெயகாந்தன், சிறுகதை, மனிதநேயம்*

## 1. ஆய்வு அறிமுகம்

இருபதாம் நூற்றாண்டில் புனைகதை இலக்கியம் வளர்ச்சி பெற்று புதிய பரிணாமத்தை அடைந்தது. ஐரோப்பியரின் வருகை காரணமாக அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கில கல்வியும் அதன் பயனாக உருவான மத்தியதர வர்க்கமும் புனைகதை இலக்கியம் தோன்றுவதற்குக் காரணமாயின. ஆரம்பத்தில் மேலைத்தேய நாட்டு மரபை ஒட்டி தமிழ்ச் சிறுகதைகள் தோற்றம் பெற்றாலும் பின்னைய காலத்தில் தமக்கும் தமது சமூகத்திற்கும் ஏற்றவாறான நடைமுறைப்பாங்கிலான சிறுகதைகளை கதையாசிரியர்கள் தோற்றுவித்தனர். 1950களில் சமுதாயத்தில் இடம்பெறுகின்ற மிக முக்கியமான நடைமுறைப் பிரச்சினைகள், நடைமுறை விடயங்கள் போன்றவற்றை மையப்படுத்தியே சிறுகதையாசிரியர்கள் தம் கதைகளை வெளியிட்டனர். அந்தவகையில் தென்னார்காடு மாவட்டம் கடலூரில் பிறந்த ஜெயகாந்தன் ஆரம்பத்தில் தத்துவ நோக்குடைய சிறுகதைகளை எழுதி, பின்னர் தனது மார்க்ஸிய மற்றும் ஆன்மீக பண்புகளை மையமாகக் கொண்ட சிறுகதைகளை எழுதினார். இவர் மார்க்ஸிய பார்வை உடையவராக இருந்தாலும் காங்கிரஸையும் ஆதரிப்பவர் என்பதால் அவரது சிறுகதைகளில் இரு கோட்பாட்டுக் கருத்துக்களும் இருப்பது சிறப்பம்சமாகும்.

'சிறுகதை மன்னன்' என்று சுட்டும் அளவிற்கு சிறந்த சிறுகதைகளை எழுதிய ஜெயகாந்தன், உரத்த ஆளுமை, விரிவான வாழ்க்கை அனுபவங்கள் மற்றும் இடைவிடாத படைப்பாக்கம் உடையவராகவும் விளங்குகிறார். இவரது சிறுகதைத் தொகுதிகளாக **ஒருபிடி சோறு, மாலைமயக்கம், சுமை தாங்கி, உண்மை சுடும், புதிய வார்ப்புக்கள்** போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவரது சிறுகதைகளுள் மனிதநேயம் குறித்த சிறுகதைகள் முக்கியத்துவம் வாய்ந்தனவாக இருக்கின்றன. அன்பு, பாசம், பற்று, ஈவு, இரக்கம், கருணை, சகோதரத்துவம், தாய்மை போன்றவைகள் மூலம் மக்களிடம் மனிதநேயத்தை உணரலாம். கிடைத்ததற்கரிய மனிதப் பிறவியை நேசிப்பதும் சாதி மதங்களுக்கு அப்பாற்பட்டு மனிதனோடு மனிதன் இணைந்து அன்பு செலுத்தி மகிழ்வோடு வாழ்வதுமே மனிதநேயம் ஆகும். இன்று மனிதநேயம் எனும் புனித குணம் மங்கி, மருகிச் செல்வதால் அதனையொட்டிய இலக்கியங்கள் அதிகளவில் வெளியானது நாம் அறிந்த விடயம்.

அந்தவகையில், ஜெயகாந்தனின் மனிதநேயம் பரந்துபட்டது. ஆண்மை நீக்கப்பட்ட காளை மாடுகளையும் நகராட்சி வண்டியில் பிடித்துச் செல்லப்பட்ட தெரு நாயையும் தம் மனிதநேய எழுத்தில் அழியாத ஓவியமாய் படைத்துக் காட்டியுள்ளார். பால்பேதம், இதோ ஒரு காதல் ஆகிய சிறுகதைகளினூடாக நாய் மற்றும் மாட்டைக் கருவியாகக் கொண்டு கேடான நிலையில் உள்ள மனித நிலையை தன் மனித நேயப் பார்வையில் பேசியுள்ளார் ஜெயகாந்தன். இவ்வாறு ஜெயகாந்தனின் சிறுகதைகள் மங்கி மருகிப் போன மனிதநேயம் மிளிர வேண்டும் எனும் நோக்கில் காணப்படுகின்றன.

## 2. இலக்கிய மீளாய்வு

ஜெயகாந்தனின் சிறுகதைகளில் மனிதநேயம் எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட மேற்படி ஆய்வில் ஜெயகாந்தனின் எழுத்துப்பணி மற்றும் அவரது சமூக உணர்வுகளை தெளிவுபடுத்தும் நோக்கிலும் அவருடன் தொடர்புபட்ட அறிவினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலும் ஆய்வுத் தலைப்புக்குப் பொருத்தமான நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் மீளாய்வு செய்யப்பட்டன.

**'ஒரு நாள் ஒரு பொழுது'** எனும் தலைப்பின் கீழ் 2010 இல் வெளிவந்த கட்டுரையில் ஜெயகாந்தனுடனான ஒரு சந்திப்பு குறித்த தெளிவான விளக்கம் தரப்பட்டுள்ளது. ஜெயகாந்தன் குறித்த கட்டுரையாசிரியரின் கருத்துக்களும் அதில் இடம்பெற்றுள்ளன.

2014 ஆம் ஆண்டு தமிழ் இலக்கியவாதிகள் சிலரினால் ஜெயகாந்தனின் 80வது பிறந்த நாளை முன்னிட்டு **'ஜெயகாந்தன் அப்படிச் செய்திருக்கக்கூடாது'** எனும் தலைப்பின் கீழ் சஞ்சிகை ஒன்று வெளியிடப்பட்டது. அதில் ஜெயகாந்தன் பற்றிய இலக்கிய ரீதியான ஆய்வுகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நா.முத்துநிலவன் எனும் ஆசிரியரினால் 2011ம் ஆண்டு **'ஜெயகாந்தன் படைப்புகள்'** எனும் கட்டுரையில் **ஒரு ஜெயகாந்தனும் பல ஜெயகாந்தன்களும்** எனும் தலைப்பில் ஜெயகாந்தனின் சிறுகதைகள் விமர்சன ரீதியான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு எழுதப்பட்டுள்ளது.

தமிழ் இந்து எனும் சஞ்சிகையில் தி. இரா. மீனா எனும் ஆசிரியரினால் **'பாரதி மரபில் ஜெயகாந்தன்'** எனும் கட்டுரைத்தொகுப்பு வெளியிடப்பட்டுள்ளது. பாரதியை முழுமையாய் உள்வாங்கி வாய்ப்பு கிடைக்கிறபோதெல்லாம் மேற்கோளாக்கி அவரது கருத்துக்களை படைப்பிலும் வாழ்க்கையிலும் நடைமுறைப்படுத்துவதில் ஜெயகாந்தனின் பங்களிப்பு எவ்வாறு என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

எழுத்தாளர் வாசந்தி அவர்கள் (2021) ஜெயகாந்தனின் **"யுகசந்தி"** எனும் சிறுகதையினை விமர்சன ரீதியாக வெளியிட்டுள்ளார்.

ஆசிரியர் பி. கே சிவகுமார் அவர்கள் (2003)ல் **திண்ணை** எனும் வாரப்பத்திரிகையில் 'ஜெயகாந்தன் பரபரப்பு' எனும் தலைப்பில் ஓர் கட்டுரை எழுதியுள்ளார். அக்கட்டுரையில் ஜெயகாந்தனின் இலக்கியப்பணி மற்றும் அவரது சமூக ஆய்வுகள் குறித்து விமர்சனக் கண்ணோட்டத்தில் கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

**''உங்கள் நூலகம்''** எனப்படும் சஞ்சிகையில் ஆசிரியர் எஸ்.தோத்தாத்ரி அவர்களினால் 2015ல் ஓர் இலக்கிய ஆய்வுக்கட்டுரை வெளியிடப்பட்டுளளது. இதில் 'ஜெயகாந்தனும் ஆளுமை சிதைவும்' எனும் தலைப்பின் கீழ் ஒரு கட்டுரையினை அவர் வெளியிட்டுள்ளார். அதில் அவர் ஜெயகாந்தனின் முற்போக்கு சிந்தனைகள்.அவர் படைத்தளித்த நூல்கள் பற்றி விளக்கியுள்ளார். மேலும் இக்கட்டுரையில் ஜெயகாந்தனின் பொதுவுடமைவாத சிந்தனைகளையும் தெளிவான முறையில் எடுத்துக்காட்டியுள்ளார்.

ஆசிரியர் அந்தோணி ராஜ் அவர்களினால் 2020ல் ''ஜெயகாந்தன் சிறுகதைகள்'' எனும் தலைப்பில் புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அப்புத்தகத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஜெயகாந்தனின் சில சிறுகதைகள் சமூகத்தில் காணப்படும் சில சிக்கலான விடயங்கள் வெளிக்கொண்டுவருமாற்று விமர்சிக்கப்பட்டுள்ளது.

### 3. ஆய்வு முறையியல்

இவ்வாய்வில் சமூகவியல், மொழியியல், ஒப்பியல், விளக்கமுறை அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது ஒரு பண்புசார் ஆய்வாகும்.

### 4. தரவு சேகரித்தல்

இவ்வாய்விற்கு தரவு சேகரிப்பு முறையாக இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஜெயகாந்தனால் படைக்கப்பட்ட சிறுகதைகள் மற்றும் ஜெயகாந்தன், மனிதநேயம் தொடர்பாக வெளிவந்த கட்டுரைகள், சஞ்சிகைகள், ஏனைய நூல்கள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 5. கலந்துரையாடலும் பெறுபேறுகளும்

### 1. ஜெயகாந்தனின் மனிதநேயம் குறித்த சிறுகதைகள்:

- ஒரு பகல் நேர பசஞ்சர் வண்டியில்
- புதிய வளர்ப்புகள்
- நிக்கி
- சுமை தாங்கி
- விளக்கு எரிகிறது
- டிரெடில்
- போர்வை
- தனிமனிதன்
- சுமைபேதம்
- அக்ரகாரத்துப் பூனை
- ஒரு வீடு பூட்டிக்கிடக்கின்றது

### 2. ஜெயகாந்தனின் சிறுகதைகளில் மனிதநேய வெளிப்பாடு:

சக மனிதர்களிடம் அன்பு காட்டுவதை மனிதநேயம் எனக் கூறலாம். மனிதநேயத்தில் உயிரிரக்கப் பண்பு என்பது முக்கிய இடம் வகிக்கின்றது. பிறருக்கு துன்பம் விளைவிக்காமல் இருத்தல், இளகிய இதயம், இரக்க சுபாவம் என்பவை இதனுள் உள்ளடங்கும்.

''அன்பின் வழியது உயர் நிலை
அஃதிலார்க்கு என்புத்தோல் போர்த்த உடம்பு'' என்கிறார் திருவள்ளுவர்.

அந்தவகையில், மனிதாபிமான சிந்தனைகளை சமூகத்தின் மத்தியில் வேரூன்ற செய்வதில் ஜெயகாந்தன் முக்கிய பங்காற்றியுள்ளார். ஜெயகாந்தனின் சிறுகதைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு கருப்பொருளைக் காணலாம். ஆயினும், அவருடைய சிறுகதைகள் அனைத்திலும் அடிப்படையாக இழையோடுவது மனிதாபிமானப் பண்பாகும். அவர் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கி தான் கண்டவற்றை அனுபவக் கூறுகளுடன் குழைத்து சின்னஞ்சிறு கலைவடிவங்களாகப் படைத்துள்ளார். இச்சின்னஞ்சிறு கதைகளுக்குள் வாழ்க்கை குறித்த அவரது பரந்துபட்ட கண்ணோட்டமும் மனித நேயத்தை வலியுறுத்தும் மனிதகுலம் தழுவிய தொலைநோக்கும் எடுத்துக்காட்டப்படுகிறது. தமிழ் இலக்கிய உலகின் முடிசூடா மன்னனாக திகழ்ந்த ஜெயகாந்தன் தனது படைப்புக்கள் வாயிலாக இச்சமூகத்திற்கு தேவையான பல நற்சிந்தனைகளை ஒளிரவிட்டுள்ளார்.

ஜெயகாந்தனின் மனிதநேயத்தினை பின்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்.

#### ❖ பிற சாதியினர் மீதான மனிதநேயம்

அவரது படைப்புக்களில் ஒன்றான **'ஒரு பகல் நேர பசஞ்சர் வண்டியில்'** என்ற கதை பல்லாண்டு காலமாக விழுதுவிட்டு வளர்ந்துவிட்ட சாதியத்தை அசைத்துப் பார்க்கும் ஒரு பெரும் புரட்சிக் கருவினைக் கொண்டுள்ளது. ஒரு பிராமண மாது கீழ்க் குலத்திலே பிறந்த அம்மாசி கிழவனிடத்தில் தன் குழந்தையை ஒப்படைத்துவிட்டு இறந்து விடுவதாகவும், அந்த அம்மாசி அவளுக்கு ஈமக் கடன்கள் செய்து விட்டு குழந்தையை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாகவும் கதை அமைகிறது.

“தன் தாய்க்கு செய்யத் தவறிய ஈமக் கடன்களையெல்லாம் நேற்று ஒரு தாய்க்கு செய்து விட்டு வாழ்க்கையில் தனக்கு கிடைத்திருக்கும் பொக்கிஷம் போல அந்தக் குழந்தையை இரவெல்லாம் மார்போடு அணைத்துக்கொண்டு….” என்ற வரிகள் மூலம் சாதி, பேதம் கடந்து மனிதாபிமானமே உயர்ந்தது என்பதனை வலியுறுத்துகிறார் ஜெயகாந்தன். மனித உணர்வுகளுக்கு முன்னால் சாதி நிற்காது. இதனைத் தாழ்ந்த சாதியான அம்மாசி ஒரு பிராமணப் பெண்ணிடம் காட்டும் பரிவு, பாசம் என்பவற்றினூடாக மனிதநேயப் பார்வையுடன் எடுத்துக் காட்டுகிறார்.

மேலும், தனக்கு முன்பின் அறிமுகமில்லாத ஓர் ஏழைப் பெண்ணிற்காக அம்மாசி உதவி செய்யும் விதம் அவனது மனிதாபிமான குணத்தை எடுத்துக்காட்டுகிறது.

“உங்களவாள்ளே, ஏழயாப் பொறந்த பொண்ணுகளுக்கு ஏதோ அவளுக்கேத்த மாதிரி சந்தோசமா வாழல்லியா என்ன? பொண்ணாப் பொறந்தாலும் ஏழையாய்ப் பொறந்தாலும் எங்க ஜாதியில் பொறக்கப்படாதையா” என்று சாதி, ஏழ்மை ஆகியவற்றை நினைத்து வேதனைப்படும் பிராமணப் பெண்ணுக்கு தன் மகள் போல் அம்மாசி ஆதரவு காட்டுகிறார். அம்மாசியின் ஆதரவு காட்டும் பண்பின் மூலம் ஜெயகாந்தன் மனிதாபிமானத்தை எடுத்துக்காட்டுகிறார்.

“அம்மாசி வண்டியிலிருந்து இறங்கி பிளாட்போரத்தில் இருந்த ஸ்டாலுக்குச் சென்றான். ஒரு பன்னும் ஒரு கப் பாலும் வாங்கினான். அதை வாங்கிக்கொண்டு திரும்பும் போது திடீரென என்னவோ நினைத்துக் கொண்டவனைப் போல இன்னொரு கப் பாலும் இன்னொரு பன்னும் கேட்டான்….” மேற்குறிப்பிட்ட வரிகள் பசித்தவர் யாராக இருப்பினும் அவருக்கு உணவளிக்க நினைக்கும் அம்மாசியின் மனிதாபிமானத்தை எடுத்துக்காட்டுகிறது.

மேலும், அப்பெண் இறந்து போக அவளது குழந்தையை தனது பேத்தியாக வளர்க்க முடிவு செய்து ஏற்றுக்கொள்கிறார்.

“பொண்ணு மகளா? பேத்தியா?” எனக் கேட்க, பிள்ளையைப் பெறாத அம்மாசி ஒன்றும் யோசிக்காமல் உடனே “பேத்தி” என்று பதில் சொன்னான்.

இதன் மூலம் புதிய உறவின் தோற்றத்தை சிறுகதை ஆசிரியர் உறுதி செய்துள்ளார். மனிதர்கள் மனிதநேயத்தோடு பிற மனிதர்களோடு கொள்ளும் உறவுகள் புதிய உறவுகளுக்கு வித்திடுவதையும் இச்சிறுகதை நிகழ்வுகள் காட்டுகின்றன. மனிதநேயம் தழைக்கும் போது ஆண், பெண் ஜாதி, பேத வேறுபாடுகள் எல்லாம் மறைந்து புதிய உறவுகள் தோற்றம் பெறுகின்றன என்பதனை ஜெயகாந்தன் இக்கதையினூடு எடுத்துக்காட்டுகிறார்.

- **பிற மனிதர்கள் மீதான மனிதநேயம்**

ஜெயகாந்தனின் **‘புதிய வளர்ப்புகள்’** என்னும் சிறுகதையில் ‘வேணு’ எனும் கதாபாத்திரம் இந்து எனும் பெண்ணைக் காதலித்த குற்றத்திற்காக பொய்ப் புகார் அடிப்படையில் நான்கு மாதம் சிறைத்தண்டனை பெறுகிறான். இந்துவின் தந்தை ராமபத்திரன் வேணுவை திருடன் எனக் கூறி சிறையில் அடைக்க தனது மகள் இந்துவையே சாட்சிக்கு அழைக்கிறான். வேணு விடுதலையான பின் தன் காதலி இந்துவை வந்து சந்தித்துப் பேசுகிறான். அவனது பேச்சும், அவனிடம் மன்னிப்புக்கோரும் இந்துவின் தாய் குஞ்சம்மாளின் செயலும் மனிதநேய உணர்வின் வெளிப்பாடாக உள்ளது. வேணு, குஞ்சம்மாள், இந்து ஆகிய பாத்திரங்கள் மனிதநேயத்தை எடுத்துக் காட்டுவனவாக படைக்கப்பட்டுள்ளன.

“அப்போ அவ்வளவு பெரிய பாவமா அது தோணல. அந்தப் பாவத்தை நான் இப்போ அனுபவிக்கிறேன். சாகிறவரைக்கும் அனுபவிப்பேன”. என்று அழுதாள்.

''ஸ் அழாதே இந்து எனக்கு நீ ஒரு தீங்கும் செய்யல்லே. நீ மனசார என்னை அப்புடி நினைக்கலேன்னா எனக்கு அது போதும். ''ம்ஹூம் அழக்கூடாது'' என்று அவள் தோலைக் குலுக்கி அவளை சமாதானப்படுத்தினான்.

தனக்கு இந்து தவறிழைத்திருந்தாலும் அவள் அதற்காக மனதார வருந்தி மன்னிப்புக்கோரும் போது அதனை மன்னிப்பதோடு மனம் உருகி அவளை சமாதானப்படுத்தும் வேனுவின் மனித நேயத்தினை ஜெயகாந்தன் சுட்டிக்காட்டுகிறார்.

''குஞ்சம்மாள் ஒரு வினாடியில் கோபமடங்கி, நெஞ்சம் குலைய அவர்களிடையே குறுக்கிட மனமின்றி ஹாலிலே ஒதுங்கி நின்றாள். ''யார் பெற்ற பிள்ளையோ இவன்? இவ்வளவு நல்ல பிள்ளையான வேணு நான் பெற்ற பெண்ணின் மீது வைத்த ஆசையால் என் கணவரின் முன்கோபத்துக்கும் பிடிவாதத்திற்கும் பலியாகி நாலுவருடம் அநியாயமாய் ஜெயிலில் இருந்துவிட்டு, 'நீ எனக்கு ஒரு தீங்கும் செய்யல்லே' என்று தனக்கு எதிராக சாட்சி சொன்னவளிடம் வந்து சொல்கிறானே.''

இவ்வரிகள் தவறிழைத்தவர்கள் தனது கணவரும் பிள்ளையுமாக இருந்த போதும் குஞ்சம்மாள் அவர்களுக்காக பரிந்து பேசாமல் நியாயத்தின் பக்கம் இருந்து வேணுவிற்காக வருந்துவது அவளது மனிதநேய உணர்வின் வெளிப்பாடாகும் என்பதை எடுத்துக்காட்டுகிறது.

இதுபோலவே, ஜெயகாந்தனின் **'விளக்கு எரிகிறது'** எனும் சிறுகதையில் 'மருதநாயகம்' தனக்கு பொருளாதார சிக்கல் ஏற்பட, செய்ய வழியின்றி காசிநாதப்பிள்ளையிடம் சென்று பழைய சாமான்கள் வைத்திருக்கும் சிறு அறையை கேட்கின்றார். காசிநாதப்பிள்ளை மருதநாயகத்தின் நிலையறிந்து,

''அவர் இங்கேயே இருக்கட்டுமே! வாடகை தராவிட்டால் என்ன?'' என்ற பரந்த மனதுடன் தனக்குள் நினைத்துக் கொள்கிறார்.

''இந்த வீட்டிலே நீங்க எவ்வளவு காலம் வேணுமானாலும் இருங்க. வாடகை பற்றி கவலைப்பட வேணாம்'' என்று மருதநாயகத்திடம் கூறினார்.

கேட்பவர்க்கு அவர் நிலை அறிந்து உதவுவது தெய்வச் செயலாகும். பிரதி உபகாரம் எதனையும் எதிர்பார்க்காது அடுத்தவன் நிலையறிந்து உதவ வரும் மனிதாபிமானத்தினை ஆசிரியர் இச்சிறுகதை மூலம் எடுத்துக் காட்டியுள்ளார்.

மேலும், **'சுமைதாங்கி'** எனும் சிறுகதையின் மூலம் மனிதாபிமான பண்பு உயர்ந்த முறையில் எடுத்துக்காட்டப்படுகிறது. 'பொலிஸ்காரன்' எனும் கதாபாத்திரத்தினூடாக மனிதாபிமான அம்சங்கள் வெளிக்கொணருகிறார் கதையாசிரியர். வீதி விபத்தில் சிக்கி உயிரிழந்த பையனை அடையாளம் காண அவ்வீதி மற்றும் அங்கேயுள்ள வீடுகளுக்குச் சென்று விசாரணை செய்யும் பொலிஸ்காரனின் மனநிலை இனம் தெரியாத ஒரு பிள்ளையாயினும் அது தான் தேடும் பிள்ளையாக இருந்துவிடக் கூடாது என்ற அவரது ஏக்கம் மனிதனாக பிறந்தவனுக்கு இருக்க வேண்டிய இரக்க குணத்தினை எடுத்துக் காட்டுகின்றது.

''தூதுவன் போல் ஒரு பொலிஸ்காரன் அந்தக் காலனிக்குள் வந்து ஒவ்வொரு வீடாகக் கேட்டான்…கேட்டானா?…. அவன் தன் நெஞ்சும் உடலும் பதபதைக்க ஒவ்வொரு வீட்டின் முன்பும் நின்று அம்மா! உங்க வீட்டிலே ஏதாவது கொழந்தை, ஆம்பள கொழந்தை, பத்து வயசு இருக்கும் காக்கி நிசாரும் வெள்ளை சட்டையும் போட்டுகிட்டு……உண்டுங்களா?'' என்று திணறினான் பொலிஸ்காரன்.

''எங்க வீட்டிலே கொழந்தையே கெடையாது'' என்றான் வீட்டுக்குள்ளிருந்து வந்தவன்.

''அம்மா! நீ புண்ணியவதி!'' என்று அந்தப் பெறாதவளை எண்ணி மனதுக்குள் பெருமைப்பட்டவாறே.....''

வழமையான பொலிஸ்காரக் கதாபாத்திரம் போலன்றி இக்கதாபாத்திரம் படைக்கப்பட்டுள்ளமை மேற்கண்ட வரிகள் மூலம் எடுத்துக்காட்டப்படுகின்றன.. இறந்து கிடக்கும் குழந்தை தான் தேடும் பிள்ளையாக இருந்துவிடக் கூடாது என பரிதவிக்கும் விதம் அக்கதாப்பாத்திரத்தின் மனிதாபிமானத்தை எடுத்துக்காட்டுகிறது.

''ஏதோ ஒரு வீட்டில் யாரோ ஒரு தாயின் இதயத்தில் அந்த (டைம்பாம்) நேரம் வந்ததும் வெடித்து சிதறத்தான் போகிறது''. என்ற நினைப்பு வந்ததும் பொலிஸ்காரன் தயங்கி நின்று திரும்பிப் போய்விடலாமா என்று யோசித்தான். அந்த சோகத்தை தன்னால் தாங்க இயலாது என்ற நினைப்பிலேயே அந்தக் காட்சி அவன் மனத்தில் உருவாகி உடம்பும் முகமும் வேர்த்து நாக்கு உலர்ந்தது.''

இவற்றோடு நின்று விடாமல் அக்குழந்தையின் உயிரைப் பறித்த கடவுளை நொந்துக்கொள்ளும் அவரது மனம் சமூகத்தின் பார்வையை திசைதிருப்புவதாக அமைகிறது.

''ஐயோ இவள் அந்த தாயாய் இருக்க வேண்டாமே'' என்று அவன் இதயம் கெஞ்சியது.
(ஒருத்தி) ஒன்பது மாசம் சுமந்து பெத்த குழந்தையை இப்படி கேள்வி முறையில்லாமல் எடுத்துக்க கடவுளுக்குத் தான் என்ன நியாயம். ''சீசீ கடவுள்தான் உயிரினங்களை உண்டாக்கிறார்...''

என அவர் கடவுளை குறை கூறுவதும், இவ்வுலகில் குழந்தையின் இறப்பு, இழப்பை தாய் எவ்வாறு தாங்குவாள். தாய்க்கு முன் தனது சிறு குழந்தை பிணமாகக் கிடப்பதற்கு கடவுள் எவ்வாறு அனுமதிக்கிறார் எனும் சிந்தனை பொலிஸ்கார உத்தியோகத்தைத் தாண்டி அவரிடம் இருக்கும் மனிதநேயத்தை எடுத்துக்காட்டுகிறது. இனம் தெரியாத ஒரு மனிதனிடத்தில் எதனையும் எதிர்பாராது அன்பு செலுத்துவதே மனிதாபிமானம். இனம், மதம், சாதி தெரியாத ஒரு குழந்தை அரைபட்டு இனங்காணமுடியாத வகையில் இறந்து கிடக்கின்றது. அவ்விழப்பிற்கு முன்னால் உலகில் மனிதன் வகுத்த கட்டுப்பாடுகள் எதுவுமே செல்லாக் காசுதான். அவ்விழப்பை, அந்த துன்பத்தைக் கண்டு மனித மனம் கலங்குவதே ஒரு மனிதாபிமானப் பண்புதான்.

பொலிஸ்காரன் அக்குழந்தையை ஒரு பெற்றோரின் நிலையிலிருந்து பார்க்கிறார், பரிதவிக்கிறார். இதுவே ஜெயகாந்தன் கூறவிளையும் மனிதாபிமானம்.

- **பிற உயிர்கள் மீதான மனிதநேயம்**

ஜெயகாந்தனின் எழுத்துக்கலை பரந்துபட்டது. அவர் தனது மனிதாபிமான சிந்தனைகளை மனிதர்களைத் தாண்டி விலங்குகளிலும் பதியவிட்டுள்ளார். மனிதர்களைப் போலவே விலங்குகளுக்கும் உணர்ச்சிகள் உண்டென வலியுறுத்தியுள்ளார். அந்தவகையில், அவரால் எழுதப்பட்ட **'நிக்கி'** எனும் சிறுகதை ஒரு அநாதரவான தெரு நாயை சித்தரிப்பதாக அமைகிறது. 'நிக்கி' எனும் நாய் எப்படி அன்புக்காக ஏங்குகிறது என்றும், அன்பைப் பெறுவதற்கான அதனது செயல்களும் இச்சிறுகதையில் அழகாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

''மனித நேசத்தைப் புரிந்து கொண்ட அந்த அநாதை நாய் குழைத்து வாலை ஆட்டிற்று..''

''கிழவி ஏதோ ஒரு சமயம் அவளும் ஒரு துண்டு வடையை நிக்கியிடம் வீசி எறிந்தாள். சந்தோசம் தாங்கவில்லை நிக்கிக்கு ஒரு சுற்று சுற்றி பரவச நடனம் ஆடிற்று''.

நாயாக இருந்தாலும் அதற்கும் அன்பைப் பெறும் உரிமையுண்டு. ஒரு அநாதை விலங்கு அன்பு கிடைக்கும்போது அடையும் பரவசத்தைக் கொண்டு ஜெயகாந்தன் சமுதாயத்திற்கு ஒரு செய்தியை கூற விளைகிறார். மனிதனாயினும் விலங்காயினும் அநாதரவான நிலையில் அவற்றிற்கு, அவர்களுக்கு அன்பு செலுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தினை நிக்கி எனும் பாத்திரப்படைப்பினூடே மனிதாபிமானத்துடன் வெளிப்படுத்தியுள்ளார்.

''ஆனால் வாழ்க்கையின் பிரச்சினை வயிறு மட்டுமா? மனிதநேயம் பசிக்கு உணவு மாதிரி ஓர் அவசியத் தேவையாயிற்று….!'' என்ற வரியினூடு தனது மனிதாபிமான குணத்தை வெளிப்படுத்தியுள்ளார். மனிதர்களைத் தாண்டி ஒரு நாயினை கதை மாந்தராகப் படைப்பது ஜெயகாந்தனின் மனிதாபமானத்திற்கு சாட்சியாகும்.

மனிதநேயம் என்பது ஒரு மனிதன் பிற மனிதனுக்கு மட்டும் காட்ட வேண்டிய பண்பு அல்ல மாறாக அனைத்து ஜீவராசிகளுடனும் மனிதநேயத்துடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதை ஜெயகாந்தன் தனது **'அக்ரகாரத்துப் பூனை'** எனும் சிறுகதையினூடாக எடுத்தியம்புகிறார்.

அந்த அக்ரகாரத்திலே வாலுத்தனம் அதிகம் பண்ணும் பூனை ஒன்றை தொந்தரவு செய்யும் வாலுத்தனம் நிறைந்த சுட்டிப் பையன் ஒன்றின் அடாவடித்தனத்தினூடாக மனிதர்களிடையே காணப்படும் குறைபாடான மனிதநேயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

''எனக்கு பொழுதுபோக்கே கொலை பன்றது தான். 'தேமே' என்று உட்கார்ந்து கொண்டு ஒரு கட்டெரும்பைப் பிடிச்சு ரெண்டு காலைக் கிள்ளி விட்டு அது ஆடுர நடனத்தை ரசிக்கிறது, ஒரு குச்சியாலே அதன் நடு முதுகிலே அழுத்திக் குத்தி அத ரெண்டாக்கி அந்த ரெண்டு துண்டும் எப்படி துடிக்கிறதுன்னு ஆராயுறது, பல்லியெ அடிச்சு வால் துடிக்கிறதப் பாக்கிறது, தும்பியப் பிடிச்சு வாலிலே நூல் கட்டி சங்கீதம் பாட வைக்கிறது, மரவட்டை, வளையல் பூச்சி, ஓணான் இதுக்கெல்லாம் அந்தக் காலத்திலே நானொரு யமகிங்கரன்!.''

இவ்வரிகளினூடாக உயிரினங்களுக்கு அநியாயம் செய்யும் மனிதநேயமற்ற பண்பை வாலுத்தனம் நிறைந்த சுட்டிப்பையன் எனும் கதாப்பாத்திரத்தினூடாக எடுத்துரைக்கிறார் ஜெயகாந்தன்.

அது அவ்வாறிருக்க இக்கதையிலே வரும் 'கடா மீசைக்காரன்' எனும் கசாப்புக் கடைக்காரனின் பாத்திரமானது எந்த உயிரினமாயினும் அது உயிர் என்ற அடிப்படையில் மதிக்கப்பட வேண்டும் அநியாயமாக அவற்றை அழிக்கக் கூடாது என்ற உயரிய மனித நேயத்தை தெளிவூட்டுகின்றது.

''பூனையை இதுவரைக்கும் நாங்க வெட்டினதே இல்லே… ஏன்னா நாங்க சாப்பிடறதுமில்லே… நான் வெட்டித் தாரேன் நீங்க சாப்பிடுவீங்களா?..''

''நான் வெட்டுரேன்… யாராவது சாபிட்டா சரி. எதையும் வீணாக்கக் கூடாது. வீணாக்கினா அது கொலை..அது பாவம் என்ன சொல்ரே''

அவன் கால்நடைகளை அறுத்து மாமிசமாக விற்கும் கசாப்புக்காரனாக இருந்தாலும் மனித தேவைக்கன்றி ஒரு உயிரினத்தை கொல்வதானது பாவம், அநீதி. மேலும், அது மனிதநேயமற்ற செயல் என தெளிவாக புரியவைத்துள்ளான்.

''அந்தப் பூனை வெசமம் பண்றதே? ''நீ வெசமம் பண்றதில்லையா? பூனைன்னா வெசமம் பண்ணும். வெசமம் பண்ணா தான் பூனைன்னு பேரு. அதே மாதிரி நீயும் வெசமம் பண்ணுவே சின்னப் பிள்ளைகன்னா வெசமம் பண்ணும் தான். பூனையும் வெசமம் பண்ணட்டுமே. அடுப்பங்கரையை மூடிவைக்க சொல்லு''

இங்கு ஜெயகாந்தன் மனிதனையும் பூனையையும் ஒரேமாதிரியான மனித நேயத்துடனே நோக்கியுள்ளார் என்பதனூடாக அவர் மனிதநேயத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளார் என்பது புலனாகின்றது.

- **தொழிலாளர்கள் மீதான மனிதநேயம்**

இவரது **'டிரெடில்'** எனும் சிறுகதை 'விநாயகமூர்த்தி' எனும் அச்சகத் தொழிலாளியை பற்றியது. விநாயகமூர்த்தி என்பவன் இயந்திரத்திடம் பழகிப் பழகி இயந்திரக் கதியிலேயே இயங்கிக் கொண்டிருக்கிறான். அவன் தன் உடல்நலத்தைப் பற்றி கவலைப்படாமல் அச்சகத்தையே தனது உறைவிடமாக, உயிர் மூச்சாக கொண்டிருக்கிறான். அவனுக்கு திருமணம் நிச்சயமானது. ஆனால் சக்திக்கு மீறிய உழைப்பு அவனை திருமண வாழ்விற்கு பொருந்தாதவனாக்கி விடுகின்றது. அதனால் திருமணம் நின்று விடுகின்றது. இக்கதையில் ஜெயகாந்தன் ஒரு தொழிலாளியின் அந்தரங்கப் பிரச்சினையை மனிதநேய கண்ணோட்டத்தோடு எழுதியுள்ளார்.

''அன்று முதல் எத்தனையோ பேருக்கு அவன் கையால் எத்தனையோ விதமான கலியாண பத்திரிகைகள் அச்சடித்துக் கொடுத்திருக்கிறான். ஆனால் தனக்கு?.....'' என விநாயகமூர்த்தியின் மனிதமன ஆதங்கத்தினை மேற்குறிப்பிட்ட வரிகள் மூலம் அழகாக எடுத்துக் காட்டியுள்ளார் ஜெயகாந்தன்.

ஜெயகாந்தன் தனது **'சுமைபேதம்'** எனும் சிறுகதையில் தனிமனித வாழ்க்கையில் மனிதநேயப்பண்பு எவ்வாறு இழையோடியுள்ளது என்பதை பதிவுசெய்துள்ளார். 'மருதையா' என்பவர் ரிக்சா இழுக்கும் தொழிலாளி. சென்னை நகரில் கைரிக்சா வைத்து தொழில் செய்கிறார். நடைபாதையில், மரத்தடியில் குடும்பம் நடத்துகிறார். அவருடைய மைத்துனன் 'செல்லப்பன்' ஒருநாள் விருந்தினராக வருகிறான். மருதையா செய்யும் தொழிலைப் பற்றி வேதனையோடு பேசுகிறான். மனிதனை மனிதன் வைத்து இழுத்துச் செல்லும் இழிவினை எடுத்துரைக்கிறான்.

''டேய் மச்சான், நம்ம எதவெச்சி இழுத்தாலும் பாரம் பாரந்தான். அதிலே எதுக்கு இது மனிசன் பாரம், இது மூட்டைப்பாரம்னு நெனச்சிக்கனும்? நம்பளை மனிசன்னு மதிக்காம நம்ம முதுவு மேலே ஒக்காந்திருக்கிறவங்களை நாம்ப ஏன் மனிசன்னு நெனக்கனும்?''

இவ்வரிகளில் மக்களை ரிக்சாவில் இழுத்தல் என்பது துன்பகரமான தொழில் என்றும் மனிதனை மனிதநேயத்தோடு மதிக்காதவர்கள் தன்னைப் போன்ற பிறமனிதனை துன்பத்துக்குள்ளாக்குகின்றான் என்பதையும் ஜெயகாந்தன் எடுத்துக்காட்டுகிறார்.

மேலும், ஒரு கணம் செல்லப்பன் யோசித்தான். வண்டி பிராட்வேயில் வந்து கொண்டிருந்தது. ''மாமா ரிக்சாவை நிறுத்து'' என்றான். மருதையா ஒன்றும் புரியாமல் வண்டியை நிறுத்தவே, கீழே குதித்து செல்லப்பன் ''நா நடந்து வர்ரேன் மாமா'' என்றான்.

''அதுவா மாமா நா மனுசன் அதனாலே என்று பளிச்சென்று கூறினான்'' செல்லப்பன்.

இச் சிறுகதைப் பகுதி சமுதாயத்தில் காணப்பட வேண்டிய மனிதநேயப் பண்புகளில் ஒன்றான மனிதனை மனிதனாக மதிக்கும் பண்பினை எடுத்துக்காட்டுகிறது. முரண்பட்ட சமுதாயச் சூழலில் மிளிர வேண்டிய மனித உணர்வுகளையும் மனிதநேயப் பண்புகளையும் ஜெயகாந்தனின் இக்கதை நிகழ்வுகள் உணர்த்துகின்றன.

- **சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்கள் மீதான மனிதநேயம்**

எழுத்தாளர் ஜெயகாந்தன் தான் வாழும் சமுதாயத்தை மிகநுட்பமாக நோக்கி அதில் காணப்படும் புறக்கணிப்புக்களான பிச்சைக்காரி, விலைமகள், தொழுநோயாளி, குடிசைவாசிகள், யாருமற்ற அநாதைகள், மனநோயாளிகள், திருடர்கள் போன்றவர்களின் வாழ்க்கைச் சூழலைப் பதிவு செய்துள்ளார். இவர்கள் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை எடுத்துக்கூறி அங்கு மனிதநேயத்தின் வகிபாகத்தை வலியுறுத்திக் காட்டியுள்ளார். அதாவது, சமுதாயத்திலே வாழும் மனிதர்களிடையில் மனிதநேயம் என்பது கூடிக் குறைந்து காணப்படுமாற்றினை விளக்கும் ஜெயகாந்தன் இக்கதைகளினூடாக வாசகர்கள் மனிதநேயத்தை அதிகமதிகம் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை எடுத்துரைக்கிறார்.

அந்தவகையில், ஜெயகாந்தனின் **'போர்வை'** எனும் சிறுகதை 'கோபாலன்' எனும் மன வக்கிரம் பிடித்தவன் 'ராஜம்' எனும் பெண்ணுடன் தகாத உறவு வைத்திருக்கிறான். 'சரசா' எனும் பெண் குளிக்கும் போது இரகசியமாக ஒளிந்திருந்து பார்க்கிறான். இப்படிப்பட்ட கீழ்மையான குணமுடைய அவன் நிர்வாணமான பைத்தியக்காரியை பார்க்கும் போது தலைகுனிந்து தனது வேட்டியை கழற்றி அவளிடம் கொடுத்து அவள் நிர்வாணத்தை மறைக்க முயல்கிறான். கயவனாக இருந்தாலும் அவனிடமும் மனிதாபிமான் இருக்கின்றது என்பதை இச்சிறுகதை எடுத்துக்காட்டுகிறது.

ஜெயகாந்தன் தனது சிறுகதைகளில் சமூகத்தில் காணப்படும் மனித நேயம் நிறைந்த பண்புகளை, அதேநேரம் மனித நேயம் குன்றிய பண்புகளையும் தனது சிறுகதைகளில் ஆழமாகப் பதித்துள்ளார்.

மேலும், **'ஒரு வீடு பூட்டிக்கிடக்கின்றது'** எனும் சிறுகதை சமூகத்தினால் புறக்கணிக்கப்பட்ட ஒரு திருடனுக்கும் அவன் வீட்டருகில் வசிக்கும் சிறு குழந்தைக்குமிடையிலான அன்பை வெளிக்காட்டுகிறது.

திருடன் என்பதற்காக ஒருவனை சமூகம் புறக்கணிக்கிறது. அவனை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. அவனுக்கு பயப்படுகிறது. அவனோ அன்புக்காக ஏங்குபவனாக இருக்கின்றான். செய்யாத தவறுக்காக தண்டனை அனுபவித்தவனாக இருக்கிறான். அவன் தேடிய அன்பு ஒரு குழந்தை மூலம் அவனுக்கு கிடைக்கின்றது.

''நீ தான் இங்கே திருட வந்திருக்கிற புது மாமாவா…? உன்னைப் பார்க்கக் கூடாதுன்னு அம்மா அறையில போட்டு மூடி வெச்சிருந்தா. அம்மா கூடத்துல படுத்து தூங்கிட்டு இருக்கச்சே நான் மெதுவா ஓடி வந்துட்டேன்..''

''அவன் சிரித்தான். அந்தக் குழந்தையின் கன்னத்தைத் தொட்டபோது அவனுக்கு அழுகை வந்தது….''

புறக்கணிக்கப்படும் ஒருவருக்கு கிடைக்கக் கூடிய ஒரு சிறு அன்பும் அவரை எவ்வளவு உணர்ச்சிவசப்பட வைக்கிறது என்பதனை ஆசிரியர் சுட்டிக்காட்டுகின்றார். அந்த குழந்தை மீதிருந்த அன்பில், அணிந்திருந்த ஆடையுடன் பெட்டிக்கடைக்குச் சென்று இனிப்புக்கள் வாங்கி வந்ததும் அதனை அக்குழந்தைக்கு

ஆசையாகக் கொடுத்ததும் அக்குழந்தையின் வரவுக்கு ஏங்குவதும் அவனது மன நிலையைக் எடுத்துக்காட்டுகிறது. ஒரு குழந்தையாக இருந்தாலும் மற்றவர் வெறுக்கும் ஒருவரை அக்குழந்தை தனது அன்பால், மனிதநேயப் பண்பால் கவர்கிறாள். அவளது மனிதநேயம் அனைவராலும் வெறுக்கப்பட்டு நொந்து போன அவன் மனதை மகிழ்விக்கிறது. தன்னைப் பார்க்க வந்ததற்காக அக்குழந்தைக்கு எந்த தீங்கும் ஏற்பட்டு விடக்கூடாது என மனதார நினைக்கின்றான். இங்கு திருடன் ஏனும் பாத்திரத்தினது மனிதநேயப் பண்பும் வெளிப்படுகிறது.

''யாராவது வந்து அடித்து இழுத்துக்கொண்டு போய்விட்டார்களோ? என்ற நினைப்பில் அவன் மனம் வருந்தினான்.''
அனைவராலும் திருடன் என தூற்றப்பட்டாலும் அவனுக்குள்ளே உள்ள மனிதநேயமானது குழந்தையை காணாதபோது வெளிப்பட்டது. மேற்கூறப்பட்டுள்ள வரிகளினூடாக இதனை ஜெயகாந்தன் பறைசாற்றுகிறார்.

இதேபோல், அவனது அயல்வீட்டவர்கள் அவனை அங்கிருந்து விரட்டுவதற்கு எத்தனித்த போது முதலியாரின் செயற்பாடானது மனிதநேயத்தை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

''திருடினப்போ ஜெயிலுக்குப் போனான். அப்புறம் ஏன் வெளியே விட்டாங்க. திருடாதப்போ அவன் எங்கே போறது?..''

''யாராவது உன்னை மிரட்டினா என்கிட்ட சொல்லு நான் பாத்துக்குறேன்''

என்று அத்திருடனுக்காக பக்கசார்பின்றி உதவுவது அவரது மனிதநேயப் பண்பை எடுத்துக் காட்டுகின்றது. ஒருவன் தவறு செய்யாத பொழுது அவனை சமுதாயம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற அவரது கருத்து அவரது மனிதாபிமானத்தை எடுத்துக் காட்டுகிறது.

இவற்றோடு அனைவரும் தனக்கு பயந்து செயற்படுவதைக் கண்ட அத்திருடன் பணம் செலுத்தி யாருக்கும் சொல்லாமல் அந்த வீட்டைக் காலிசெய்து கிளம்புவதும் அவன் செல்லும் பொழுது அக்குழந்தைக்காக இனிப்புக்கள் வாங்கி வைத்துவிட்டு செல்வதும் தான் தவறு செய்யாதவனாக இருந்தாலும் தன்னால் மற்றவர்கள் துன்பப்படக் கூடாது என்ற அவனது உயரிய மனிதநேயத்தை எடுத்துக்காட்டுகிறது

- **மனிதநேயமின்மையால் ஏற்படும் அவலங்கள்**

எழுத்தாளர் ஜெயகாந்தன **'தனிமனிதன்'** எனும் சிறுகதையில் மனிதநேயமற்ற பண்புகளையும் அதனால் நேரும் அவலங்களையும் சித்தரித்துக் காட்டியுள்ளார்.

''நாகரிகம் வளர்வதற்கு முந்தைய சமூகங்களின் உடைமை போரில் காயப்பட்டு சக்தியற்ற அவனை விட்டுச் செல்கின்றது. அவன் தனிமையில் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் நிலையில் வேறு மனித சமூகத்தைச் சேர்ந்த அவள் காண்கிறாள். அவனுக்கு மருந்திட்டும் காப்பாற்றுகிறாள். அவனும் அவளும் காதலர்களாக மாறுகின்றனர். இருவரது கூட்டத்திலும் இல்லாமல் தனித்து வாழ்கின்றனர். அவள் கருவுற்று நிறைமாத கற்பம் அடைகிறாள். இந்நிலையில் ஒரு நாள் அவன் அவனது கூட்டத்தை சந்திக்க நேருகின்றது. தன் கூட்டத்தோடு செல்ல அவன் விரும்புகிறான். அதற்கு அவள் தடையாக இருக்கிறாள். அவன் தன் விருப்பத்தை நிறைவு செய்ய அவளை அம்பு எய்தி கொன்று விடுகின்றான்.''
இச் சிறுகதையில் அவன் எனும் பாத்திரம் மனிதநேயம் அற்றவனாக காட்டப்பட்டுள்ளான்.

''அவனுடைய மௌனம் அவளை துயரத்தில் ஆழ்த்தியது: அவன் மீதிருந்த நம்பிக்கை நைந்தது. அவள் அழுதாள்! எங்கோ தன் நினைவுக்கும் எட்டாத தூரத்திலிருக்கும் தன் சமூகத்தை எண்ணி பூமி கிழிபடக் கவிழ்ந்து கூவி அழுதாள். கதறித் துடித்தாள். அவளைத் தூக்கி அணைத்துக் கொண்டு அவன் சிரித்தான். அந்தச் சிரிப்பிலே கள்ளத்தனம், நன்றி கெட்டத்தனம், எத்துவாளித்தனம், பேடித்தனம் ஆகிய துர்குணங்களும் பிரதிபலித்ததை அந்த அப்பாவிப் பெண்ணால் உணர முடியவில்லை. அதற்கேற்றாற் போல் என்ன நினைத்தாளோ என்னவோ, ''உன்னை விட்டு பிரியமாட்டேன்'' என்று அவன் கூறியதும் அவள் கண்களில் வழிந்த நீருடன் சிரித்தாள். அவனை அணைத்து முத்தமிட்டாள்''.

**'தனிமனிதன்'** எனும் சிறுகதையில் 'அவள்' எனும் பாத்திரம் மனிதநேயப் பண்பு நிறைந்த பாத்திரமாக சித்தரிக்கப்படுகிறது. 'அவன்' எனும் பாத்திரம் மனிதநேயப் பண்புகள் அறவே அற்ற சீரழிந்த பாத்திரமாக சித்தரிக்கப்பட்டுள்ளது. அவன் தன் உயிரைக் காப்பாற்றிய, தன்னையே தனக்கு அரப்பணித்த அபலைப் பெண்ணைக் கொன்று விட்டு தன் சமூகத்துடன் சேர ஓடுகின்றான்.

''கொடுமையிலும் கொடுமை அவன் கையிலிருந்த வில் வளைந்து நாண் இழுபட்டு 'பங்' என்ற ஒலியுடன் விடுபட்ட அம்பு சீறிப் பாய்கிறது. அவ்வளவு தான் 'ஆ' என்ற தாய்மையின் அலறல்? ஒன்று.....இரண்டு....மூன்று அவள் விலாவில் அம்புகள் பாய்ந்து ஓடும். நீரில் ரத்தத்தை ஓடவிடுகின்றனர். அவள் குப்புற விழுந்து கிடக்கிறாள்.''

''யார் எய்த அம்போ?'' என்று வேதனையுடன் தலையை நிமிர்த்திப் பார்க்கின்றாள். அந்த நன்றி கெட்டவன். சுயநலமென்னும் சாக்கடையிலே நெழிய வேண்டிய புழு, துரோகி, சண்டாளன் தனது முகத்தில் சங்கமமாகி கலக்க ஓடுகிறான். இப்பகுதியில் தூய்மையான மனிதநேயப் பண்பு சமூகச் சேர்க்கையின் காரணமாய் அவலப்பட்டு போவதை ஜெயகாந்தன் மிக அருமையாக விவரித்துள்ளார்.

மனிதநேயம் ஒருவரிடத்தில் மிகைந்து இருந்தால் நிலவும் நன்மைகளையும் அதே சமயம் இன்னொருவரிடத்தில் மனிதநேயம் அறவே இல்லையாயின் அச்சமூகம் சீரழியும் என்பதையும் ஜெயகாந்தன் சுட்டிக் காட்டியுள்ளார்.

மனிதன் என்பவன் உயிரினங்களில் மேலானவன். அவனை மதிப்பதே மனிதநேயத்தின் சிறந்த பண்பாகும். அவன் எந்த தராதரத்தில் இருந்தாலும் மனிதன் என்ற ரீதியில் அவன் உயர்வாய் மதிக்கப்பட வேண்டும். இதுவே கதாசிரியர் ஜெயகாந்தனினதும் கருத்தாகும்.

மனிதன் என்பவன் எந்நிலையில் இருந்தாலும் உயர்வாய் மதிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அவன் ஏனைய உயிரினங்களையும் மதிப்பான். இதற்காகத்தான் ஜெயகாந்தனது கதைகள் வெறுமனே மனிதன் பற்றி மாத்திரம் பேசாமல் ஏனைய உயிரினங்கள் பற்றியும் பேசுகின்றது. சமுதாயத்தில் மக்கள் எதிர்கொள்ளும் சவால்களை படம்பிடித்துக் காட்டும் ஜெயகாந்தன் அவ் இக்கட்டான தருணங்களில் மக்கள் எவ்வாறு மனிதநேயத்துடன் நடந்துகொள்கிறார்கள் என்பதையும் யதார்த்தபூர்வமாக எடுத்துக்காட்டியுள்ளார். மனிதநேயம் என்பது ஒரு மனிதனிடத்தில் காணப்படுமாயின் ஏனைய அனைத்தும் சீராகும் என்பதில் மறுப்பேதுமில்லை. ஜெயகாந்தனது அநேக கதைகள் இதை சுட்டிக்காட்டுகின்றன.

## 6. முடிவுரை

தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் ஜெயகாந்தன் 1950களில் எழுதத் தொடங்கி புகழ்மிக்க எழுத்தாளர்களில் ஒருவராக விளங்கினார். ஜெயகாந்தன் தன் எழுத்தின் மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த முயன்றவர். அவரது கதைகள் மக்களின் சமூக வாழ்வின் விளக்கமாகவே அமைந்தன. இலக்கிய நயம் மிக்க கதைகளைப் படைத்த காரணத்தினால் ஜெயகாந்தன் மற்ற எழுத்தாளர்களிலிருந்து வேறுபட்டவராக காட்சியளித்தார். கலையும் இலக்கியமும் சமுதாய வளர்ச்சியின் பிரச்சினை என்னும் கருதுகோளுக்கு

ஏற்ப ஜெயகாந்தனின் கதைகள் அமைந்துள்ளன. தனிமனித அவலம், பாலுணர்வுச் சிக்கல்கள், உளவியல் நோக்கு, மனிதநேயக் கருத்துகள், சமுதாயமாற்றத்தை நோக்கிய பயணம் எனும் போக்கில் அவர் தனது மனிதாபிமான சிந்தனைகளை சமூகத்திற்கு விடுத்துள்ளார். மனிதனாக பிறந்தவன் சக மனிதனுக்கு செய்ய வேண்டிய கடமைகள் என்ன? சமூகத்தில் அனைத்து வர்க்கபேதங்களைக் காட்டிலும் மனிதாபிமானமே உயர்ந்தது என்பதை தனது கதைகளில் அழுத்தமாக கூறியுள்ளார். தாழ்ந்த குடும்பத்தினர், நடுத்தரவர்க்கத்தினர், பிராமணர்கள், வணிகர்கள், முதலாளிகள், தொழிலாளர்கள் என வாழும் மனிதர்களிடையே நிலவுகின்ற முரண்பாடுகள், வர்க்க பேதங்கள், சிக்கல்கள் போன்றவற்றை அலசி ஆராய்ந்து எழுதுவதுடன் மனிதர்களைத் தாண்டி விலங்குகளுக்காகவும் மனிதநேய சிந்தனைகளை எடுத்துரைக்கும் ஜெயகாந்தனின் எழுத்து அவரது மனிதநேய ஈடுபாட்டை காட்டுகின்றது.

இலக்கியம் என்பது வெறும் பொழுதுபோக்கிற்கு உருவாக்கப்படுவதல்ல. சமுதாய மலர்ச்சிக்கு வித்திடுவது என்பதை ஜெயகாந்தனின் எழுத்துப்பணி உணர்த்துகின்றது. அவரது பன்முகப்பட்ட சிந்தனைகள், படைப்பாளுமை அவரை ஒரு சிறந்த எழுத்தாளராக இன்றும் பறைசாற்றுகிறது. சமுதாயத்தில் மக்களின் வாழ்க்கை சிறக்க வேண்டுமெனில் 'மனிதநேயம்' தழைக்க வேண்டும் என்பதனை சமுதாயத்திற்கு வலியுறுத்துகிறார் ஜெயகாந்தன்.

**உசாத்துணைகள்**

கைலாசபதி, கு. (1983). இலக்கியச் சிந்தனைகள். கொழும்பு. குமரன் புத்தக இல்லம்.

தமிழ்மகன். (2013). தமிழ்ச் சிறுகதைக் களஞ்சியம். சென்னை. விகடன் பிரசுரம்.

துரை மனோகரன். (1997). இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி. கலைவாணி. புத்தக நிலையம்.

நடராசன், பி., மயிலங்கடலூர் சிவலிங்கராஜா, எஸ். (1982). தமிழியற் கட்டுரைகள். சுப்பிரமணிய புத்தகசாலை.

நவபாரதி. (2001). ஜெயகாந்தன் சிறுகதைகள் ஒரு தரிசனம். சென்னை. கவிதா வெளியீடு.

ஜெயகாந்தன். (2014). ஜெயகாந்தன் கதைகள். அண்ணாசாலை. சென்னை. விகடன் பிரசுரம்.

ஜெயகாந்தன். (2013). ஜெயகாந்தன் சிறுகதைகள் (பாகம் 1,2). சென்னை. கவிதா பப்ளிகேசன்